# க.பொ.த(சா/த)

# உதவிக்கருத்தரங்கு வினாத்தாள்கள்

# வரலாறு

# (2016 – 2019)

# பகுதி II


தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

## *வரலாறு II*

## பகுதி I

### இலங்கைப்படம் குறித்தல்

### *மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)*

வளவ கங்கை, ஜம்புகோளப் பட்டினம், பல்லவங்க, மகியங்கனை, அநுராதபுரம், சீகிரியா, கந்தளாய்க் குளம், கம்பளை, தேவ நகரம், காலி, சிலாபம், ஹோட்டன் சமவெளி

### உதவிக்கருத்தரங்கு *2016*

மல்வத்து ஓயா, கண்டி, சூகரதித்த, பூந்தல, நாச்சதுவ வாவி, நீர்கொழும்பு, மட்டக்களப்பு நகர், யாப்பகுவ காலி, சேனாநாயக்க சமுத்திரம், திருகோணமலை, மினிப்பே அணை.

### உதவிக்கருத்தரங்கு *2017*

மல்வத்து ஓயா , கம்மல்துறை ,கற்பிட்டி , அலிகல, கதுறுகொட விகாரை , மின்னேரியா , மினிஹால் கந்த , பல்லவங்க, மகாநாகுல, பேராதனை, காசாதோட்டை , மல்வானை

### உதவிக்கருத்தரங்கு *2018*

கிருந்திஓயா, கலாதித்த, பராக்கிரமசமுத்திரம், திஸ்ஸவாவி, மிகிந்தலை. பெரகல, ஜம்புகோளப்பட்டினம், மட்டக்களப்பு, மகாவாலுகாகம, இரணைமடு, செங்கடகல, தம்பதெனியா

### உதவிக்கருத்தரங்கு *2019*

அம்பன் கங்கை, குருளுவாவி, பல்ல வங்க, கிம்ஹதித்த, உடமல்ல, மினிப்பேகால்வாய், அலிகல, பொலன்னறுவை, நாகதீபம், கல்லோயா ,ஹோபிடிகம, கம்மல்தொட

**உலகப்படம் குறித்தல்**

***மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)***

கொன்ஸ்தாந்திநோபிள், வெனிஸ், கள்ளிக் கோட்டை, பிலிப்பீன் தீவுகள், சுயெஸ் கால்வாய், சிங்கப்பூர்

## உதவிக்கருத்தரங்கு *2016*

பொஸ்டன் துறைமுகம், போர்த்துக்கல், நன்னம்பிக்கை முனை, யாவாத்தீவு, பாரசீக வளைகுடா, ஹிரோசீமா

## உதவிக்கருத்தரங்கு *2017*

சுயஸ்கால்வாய் , மலேசியா , கல்கத்தா , கிரேக்கம், அலஸ்தாந்திரியா , பாக்கு நீரிணை.

## உதவிக்கருத்தரங்கு *2018*

எதியோப்பியா, லிஸ்பன், கம்போடியா, பர்மா, மலாக்கா தொடுகடல், சுயெஸ்கால்வாய்

## உதவிக்கருத்தரங்கு *2019*

கோவா,செங்கடகல்,சிந்துநதி,நாகசாகி.ஜெனோவா,ஜெருஸலேம்

## குறு வினாக்கள்

### *மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)*

கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக் கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

A - மின்னேரித் தெய்வமென இராசரட்டை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மன்னன்.

B - இரண்டாம் இராஜசிங்க மன்னனின் சிறைக் கைதியாக இருந்து கண்டி இராச்சியம் தொடர்பான நூலொன்றை எழுதிய ஆங்கிலேயன்.

C - கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்த சீன சேனாதிபதி.

D - பிரான்சியப் புரட்சிக் காலத்தில் அரசியலில் தலையிட்ட பதினாறாம் லூயி மன்னனின் மனைவி.

### உதவிக்கருத்தரங்கு *2016*

*A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்கள் / இடங்கள் என்பவற்றை ஒழுங்கு முறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - கி.பி. 1344 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து, ஆரியச் சக்கரவர்த்திகளின் உதவி பெற்று, சிவனொளிபாத மலையைத் தரிசித்த அராபிய இனத்தைச் சேர்ந்த தேசசஞ்சாரி

B - உலகம் கோள வடிவமானதெனவும், ஏனைய கோள்கள் சூரியனைச் சுற்றிவருகிறதெனவும் கண்டறிந்த விஞ்ஞானி

C - முஸ்லிம் பிள்ளைகளுக்கென கொழும்பில் சஹிராக் கல்லூரியை நிறுவுவதில் முன்னோடியாக விளங்கியவர்.

*D* - மகாவலி கங்கையின் கிளை நதி ஒன்றினை கடதொர எனுமிடத்தில் மறித்து நிறுவப்பட்ட நீர்த்தேக்கம்

### உதவிக்கருத்தரங்கு *2017*

கீழ்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A) இரட்டை ஆட்சிக்காலத்தில் இலங்கையின் ஆளுனராக பணியாற்றியவர்

B) பர்மா மீது படையெடுத்து இலங்கையின் வர்த்தக உரிமையை பாதுகாத்த பொலனறுவை ஆட்சியாளர்.

C) கண்டியில் புதிய அரச வம்சம் ஒன்றை உருவாக்கிய மன்னன்.

D) முதலாம் உலகமகாயுத்தத்தின் பின் உலக சமாதானத்தை பேண உருவாக்கப்பட்ட அமையம்.

### உதவிக்கருத்தரங்கு *2018*

மேல் வரும் ABCD ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - ரூவன்வெலிசாய தாதுகோபத்தினைக் கட்டிமுடித்த மன்னன்.

B - எல்லாளன் இலங்கையை ஆக்கிரமித்த போது அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்

C - ஒல்லாந்தரின் உதவியுடன் பர்மாவில் இருந்து பௌத்த குருமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை நடத்திய கண்டி இராச்சிய மன்னன்

D - சரஜிவோ நகரில் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரியா நாட்டின் முடிக்குரிய இளவரசன

## உதவிக்கருத்தரங்கு *2019*

கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A.பெலிகலையில் தலதாமாளிகை அமைத்து தந்ததாதுவை பிரதிஷ்டை செய்த மன்னன்.

B.அரசன் மற்றும் பிரதான அதிகாரிகளை கொண்ட சபை

C.அரசுக்கு சொந்தமான நிலங்களில் பயிரிடுவதற்காக அறவிடப்பட்ட வரி

D.நாச்சதுாவ குளத்துடன் தொடர்புடைய நதி

# பட வினாக்கள்

## *மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)*

**A, B** ஆகிய உருக்களை அடிப்படையாகக்கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக் கிரமமாக விடைத்தாளில் எழுதுக.



உரு A

1' உரு 'A' எவ்வாறு அழைக்கப்படுகிறது?

2' இங்கிருந்து ஆட்சி செய்த ஆட்சியாளன் யார்?

3' இங்கு காணப்படும் உலகப் பிரசித்தி பெற்ற கலை நிர்மாணம் யாது?

4' இந்த இடத்தைப் பார்த்து இரசித்தவர்கள் தமது கருத்துக்களைப் பதித்துள்ள சுவர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?



உரு B

1' உரு 'B' யில் காணப்படும் நபர் யார்?

2' இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

3' இவரின் தலைமையில் 1880 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அமைப்பு எது?

4' இவரின் தலைமையில் கொழும்பில் நிறுவப்பட்ட பாடசாலையின் பெயர் என்ன?

## *உதவிக்கருத்தரங்கு 2016*

A, B ஆகிய உருக்களை அவதானித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.



உரு A

1. உரு A இல் காணப்படும் கட்டிடத்தின் பெயர் யாது?
2. இந்தக் கட்டிடம் எந்த இராசதானிக் காலத்தைச் சேர்ந்தது?
3. இது எந்தக் கலைமரபினைச் சார்ந்தது?
4. எப்பொருளினால் இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது?



உரு B

1. உரு B இல் காணப்படும் உருவின் பெயரைக் குறிப்பிடுக.
2. இது எந்த நாட்டில் அமைந்துள்ளது?
3. இந்தக் கட்டிடத்தை நிர்மாணித்த அரச வம்சத்தைக் குறிப்பிடுக.
4. இதில் அலங்காரத்திற்கென அமைக்கப்பட்டுள்ள நிர்மாணம் ஒன்றின் பெயரை எழுதுக.

## உதவிக்கருத்தரங்கு 2017

A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(1) "A" இனால் காட்டப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?

(2) இது எப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது?

(3) இதன் பயன்பாடு யாது?

(4) இதன்மூலம் பெறக்கூடிய தகவல் யாது? A



A

i. படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

ii. படத்தில் காட்டப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?

iii. மேற்படிநபர் எச்சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றார்?

iv. இக்கருவிமூலம் இவரால் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்பு ஒன்று தருக?



B

## உதவிக்கருத்தரங்கு 2018

A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலங்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A



1. A யினால் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?
2. இதனைப் பொறுப்பித்த மன்னன் யார்?
3. இதில் கூறப்பட்ட விடயங்களுள் ஒன்று தருக?
4. இதிலுள்ள உருவங்களில் ஒன்றனைத் தருக?

B



1. B இனால் காட்டப்பட்ட நிர்மாணிப்பு காணப்பட்ட இராசதானியின் பெயர் என்ன?
2. இப்பிரதேசத்தினைத் தலைநகரமாக்கிய மன்னன் யார்?
3. மேற்படி நிர்மாணிப்பின் படிவரிசைத் தூண்களில் காணப்படும் கலைப் பாரம்பரியத்திற்கு உரிய நாடுகளைத் தருக?

A - ...........................             B - ...........................

## உதவிக்கருத்தரங்கு 2019

A மற்றும் B யின் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களில் ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

1. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நிர்மாணம் யாது?
2. இது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிரதேசம் யாது?
3. இந்நிர்மாணத்திற்கு உரிய காலப்பகுதி யாது?
4. இதனை பயன்படுத்தியோர் யார்?

A



1. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அரசர் யார்?
2. தற்போது இந் நிர்மாணத்தை எவ்விடத்தில் காணலாம்?
3. இவர் எவ் விகாரைக்கு காணிக்கையை வழங்கினார்?
4. இவர் வெளிநாட்டுத் தொடர்பை பேணி வந்த நாடு எது?

B



## பகுதி II (இலங்கை வரலாறு)

**தரம் 10**

***மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)***

01 (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது இருப்பிடங்களைத் தெரிவு செய்தபோது கவனத்தில் கொண்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) (a) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது உணவுத் தேவைக்காக வேட்டையாடிய மிருகங்கள் இரண்டினைப் பெயரிடுக.

(b) அவர்கள் பயன்படுத்திய தாவர உணவு வகைகள் இரண்டினைப் பெயரிடுக.

(iii) இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் நிறுவப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு, விபரிக்குக.

(iv) வரலாற்றுக் கால இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட முறையினைத் தெளிவுபடுத்துக.

02 (i) பின்வரும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் பண்டைய இலங்கையில் நடைமுறையில் இருந்த வரிமுறைகள் எவை என ஒழுங்குமுறையில் எழுதுக.

A - மன்னனின் நிலத்தில் பயிர் செய்வதற்குச் செலுத்தப்பட்ட வரி

B - கால்வாய்களில் மீன்பிடித்தலின் பொருட்டு அறவிடப்பட்ட வரி

C - குளங்களில் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தியவர்களிடம் அறவிடப்பட்ட வரி

(ii) ஹோபிடிகம சந்தையின் நிர்வாகம் பற்றி விதிக்கப்பட்டிருந்த முக்கிய சட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) பண்டைய இலங்கையில் கைத்தொழில்கள் நிலவியமையை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(iv) பண்டைய மக்களின் உணவு வகைகளில் பல்வகைத் தன்மை காணப்பட்டமையை அவர்கள் பயன்படுத்திய உணவுகளின் அடிப்படையில் உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.

03 (i) பின்வரும் குளங்களை நிறுவிய மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A - அபய வாவி

B - தீச வாவி

C - கலா வாவி

(ii) பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) எமது முன்னோர் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடைவடிக்கைகளைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

(iv) பண்டைய கால நீர்ப்பாசனத் தொழிநுட்பத்தில் அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றின் சிறப்பம்சங்களை உதாரணங்கள் இரண்டின் மூலம் விளக்குக.

04 (i) இலங்கையின் முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரங்கள் இரண்டினையும், இரண்டாம் நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரம் ஒன்றினையும் பெயரிடுக.

(ii) முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த இறுதி நிர்வாக மத்திய நிலையம் வீழ்ச்சி அடைவதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

(iii) இலங்கையின் இரண்டாவது நகராக்கலின் மத்திய நிலையமாக ஈரவலயம் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(iv) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், இலக்கியப் பணிகளை விபரிக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2016

05 **(i)** இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தகவல்கள் கிடைத்துள்ள குகைகள் மூன்றினைப் பெயரிடுக.

**(ii)** முன் வரலாற்றுக் கால யுகத்தை, வரலாற்றுக்கு முற்பட்ட யுகத்தில் இருந்து வேறுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(iii)** முன் வரலாற்றுக் காலத்தில் சிறந்த தொழினுட்பம் நிலவியமையை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

**(iv)** ஆரம்ப வரலாற்றுக் குடியிருப்புக்களின் தன்மையை இரண்டு விடயங்களை முன்வைத்து உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

06 **(i)** பண்டைய சமுதாயத்தின் சுகாதாரத் தேவையை மேம்படுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுத்த ஆட்சியாளர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

**(ii)** வரலாற்று மூலாதாரங்களுக்கு அமைய இலங்கையின் பண்டைய சமுதாயத்தில் காணப்பட்ட நான்கு கைத்தொழில்களைக் குறிப்பிடுக.

**(iii)** பண்டைய இலங்கைச் சமுதாயத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமையை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

**(iv)** அந்நிய பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் பிரிவினருடன் நட்புறவுடன் வாழுதல் இந்நாட்டு வரலாற்றில் துல்லியமாகத் தெரியும் இயல்பு என்பதை உதாரணங்கள் இரண்டின் மூலம் தெளிவுபடுத்துக.

07 **(i)** இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டமியற்றிய மன்னர்கள் மூவரின் பெயரை எழுதுக.

**(ii)** பின்வருவன தொடர்பாக அறவிடப்பட்ட வரிகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

**A** - குளத்து நீரைப் பயன்படுத்துதல்

**B** - சேனைப் பயிர்ச் செய்கை

**C** - அரசனுக்கு உரித்தான இடத்தில் பயிர் செய்தல்

**D** - கால்வாய்களில் மீன் பிடித்தல்

**(iii)** முற்காலத்தில் இலங்கையில் பெண்களுக்குக் கௌரவமான இடம் வழங்கப்பட்டிருந்தமை பற்றி உதாரணங்கள் இரண்டின் மூலம் விளக்குக.

**(iv)** சுகதேகியாக வாழும் பொருட்டு பண்டைய சுதேச உணவு முறையின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகை பற்றி இரண்டு உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.

08 **(i)** விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராசதானி மூன்றாகப் பிரிக்கப்பட்டது. அந்த மூன்று பிரிவுகளினதும் பெயர்களைத் தருக.

**(ii)** தர்மபால மன்னனுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

**(iii)** முதலாம் விமலதர்மசூரிய மன்னன் எதிர்நோக்கிய இரண்டு சவால்களை விபரிக்குக.

**(iv)** கண்டி இராசதானிக் காலத்தில் நிலவிய பொருளாதார, சமூக இயல்புகள் மூன்றினைத் தெளிவுபடுத்துக.

## உதவிக்கருத்தரங்கு 2017

09 1 வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்விடங்கள் மூன்று தருக?

2. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட இரு இடங்கள் கீழே தரப்படுகின்றது.அவ் எச்சங்கள் வெளிக்காட்டி இருந்த பண்புகள் தருக?

(A) இராவணஎல்ல குகை

(B) குருவிட்ட பட்ட தொம்பலென

3. “முன்வரலாற்றுக் காலம் தொழிநுட்ப அடிப்படையில் முன்னேறிய காலமாகும்.” இக்காலத்தில் சிறப்புப் பெற்று காணப்பட்ட தொழிநுட்பம் இரண்டு தந்து விளக்குக? (05 புள்ளிகள்)

4. வரலாற்றுக்கால குடியேற்றத்தின் கட்டமைப்பை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக?

10 (01) கி.பி 9ம் நூற்றாண்டை சார்ந்த கல்வெட்டுகளில் காணப்படும் பின்வரும் சொற்கள் குறிக்கும் விடயங்களை அதே ஒழுங்கில் தருக?

A. ஏகஆஸ்தான

B. வத்ஹிமி

C. சபாவ

(02) பின்வரும் மன்னர்கள் வைத்தியத்துறை தொடர்பில் ஆற்றிய சேவைகள் ஒவ்வொன்று வீதம் தருக.

A - புத்ததாஸ -

B - 5ம் மஹிந்த -

C - 4ம் காசியப்பன் -

D - 1ம் உபதிஸ்ஸன் -

(03) இந்நாட்டு மன்னர்கள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் அவர்களின் வெளியுறவுக் கொள்கை என்பதினுள் அடங்கும்.இவ்வாறான இரண்டு தொடர்புகளை தந்து உதாரணம் மூலம் விளக்குக.

(04) பண்டைமக்களின் பொருளாதாரத்தில் அடிப்படையாக அமைந்த மூன்று துறைகளைப் பெயரிட்டு தெளிவுற விளக்குக.

11 (01) பண்டை சமூகத்தில் கிடையான கட்டமைப்பில் காணப்பட்ட மூன்று அதிகாரிகளைப் பெயரிடுக.

(02) எமது புராதன அரசர்கள் விதித்த சட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.அச்சட்டங்களை இயற்றிய மன்னர்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் காணப்படுகின்றன.சட்டங்களுக்குப் பொருத்தமான அரசர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A- மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது.

B- எருமை பசு ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை விதித்தல்

C- நீர் நிலைகளில் வாழும் உயிர் இனங்களை கொலை செய்யக்கூடாது.

D- காட்டு மரங்களை வெட்ட வேண்டாம்.

( 3ம் உதயன், ஆமண்ட காமினி, 4ம் மஹிந்தர், நிஸ்ஸங்க மன்னன், இளநாகன் )

(03) இலங்கையில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதை வெளிக்காட்டும் இரண்டு சந்தர்ப்பங்களை முன்வைத்து விளக்குக.

(04) பண்டைய இலங்கையில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட மூன்று வரிகளைத் தந்து விளக்குக?

12 (01) பொலனறுவை இராச்சிய வீழ்ச்சியின் பின் பிரதேச தலைவர்கள் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கோட்டைகள் மூன்றைப் பெயரிடுக.

(02) இரண்டாம் நகராக்க இராசதானிகளின் முதல் மன்னர்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது.அவற்றைப் பொருத்தமான முறையில் தொடர்புபடுத்தி எழுதுக.

A- தம்பதெனியா

B- யாப்பகுவ

C- குருநாகல்

D- கம்பளை

( 6ம் பராக்கிரமபாகு, 2ம் புவனேகபாகு, 3ம் விஜயபாகு, 1ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு )

(03) பொலனறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக.

(04) உலர்வலய நாகரிகங்களின் வீழ்ச்சியின் பின்னர் உருவான ஈரவலய இராசதானிகளின் பொருளாதாரம் எவ்வாறு அமைந்தது என்பதை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2018

13 (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் பரவியிருந்ததாகக் கருதப்படுகின்ற தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்று தருக.

(ii) கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய விடையை ஒழுங்குமுறையாக எழுதுக.

A - உப்புப் பயன்படுத்தியமைக்கான ஆதாரம்

B - துளையிடப்பட்ட மண்டையோடு கண்டெடுக்கப்பட்ட குகை

C - வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட இடம்

D - களிமண் ஓடக் கல்லறை மயானம் கண்டெடுக்கப்பட்ட இடம் (4 புள்ளி)

(iii) வரலாற்றுக் காலக் குடியிருப்புக்கள் பல்வேறு தொழில்களின் அடிப்படையில் பாகுபடுத்தப் பட்டிருந்தது என்பதனை இரு உதாரணங்களின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக

(iv) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

14 (i) கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் A, B, C என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. அவை குறிக்கும் பொருளைத் தருக.

A - தொட்டபோஜக

B - கஹபதி

C - பருமகலு (3 புள்ளி)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து A, B, C, D ஒழுங்கு முறையில் எழுதுக.

A - நகர கட்டட நிர்மாணி

B - உணவுச் சாலை அதிகாரி

C - தலைமை அமைச்சர்

D - அரச செயலகத் தலைவர்

(நடஅதெக, மஹமத, பதகு, நகரகுத்திக, படகரிக, சேனாதிபதி, நகரவடிக, பனபெடிக)

(iii) புராதன இலங்கையில் அரசுரிமை கிடைத்த இரு முறைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

(iv) வசப மன்னன் அரசை மத்திய மயப்படுத்தப்படுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக.

15 (i) அநுராதபுர காலத்தில் தேவநம்பியதீச மன்னனுக்குப் பின்னர் அரசுரிமையை பெற்ற அவரின் சகோதரர்கள் மூவரின் பெயர்களைத் தருக.

(ii) புராதன காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான பொதுச் சுகாதார வசதிகளை வழங்கிய வைத்தியசாலைகளுக்கு வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நான்கு பெயர்களைத் தருக.

(iii) பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக வைத்தியத்துறைக்குப் பங்களிப்புச் செய்த மன்னர்கள் மூவரைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவரின் பணியைச் சுருக்கமாக விளக்குக.

(iv) புராதன காலத்தில் பின்பற்றப்பட்ட சூழல் பாதுகாப்பு முறைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

16 (i) மேல்வரும் A, B, C ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A - மாகம என்னும் இராட்சியத்தை உருகுணுரட்டைப் பிரதேசத்தில் உருவாக்கியமை

B - மகாமேக நந்தவனத்தை அமைத்தமை

C - ஜேத்தவனராமய விகாரையை அமைத்தமை (3 புள்ளி)

(ii) A - வரலாற்று ரீதியான மாயரட்டைப் பிரதேசத்தினூடாகக் கடலில் கலக்கின்ற பிரதான நதிகளில் இரண்டையும்

B - வரலாற்று ரீதியான இராசரட்டைப் பிரதேசத்தினூடாகக் கடலில் கலக்கின்ற பிரதான நதிகளில் இரண்டையும் தருக.

(iii) இரண்டாம் நகராக்க காலத்தின் பொருளாதார நடவடிக்கைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(iv) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் சிரேஷ்ட ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்கு ஏதுவான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

17 (i) A - சீதாவாக்கை மன்னனான மாயாதுன்னையின் நண்பனான கண்டி இராட்சிய ஆட்சியாளன்

B - 1 ஆம் இராஜசிங்க மன்னனுக்கு கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு உதவிய கண்டி இராச்சிய பிரதானி

C - டொன்பிலிப் என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்ற கரலியத்த பண்டாரவின் மருமகன்

ஆகியோரின் பெயர்களை A, B, C என்ற ஒழுங்குமுறையில் எழுதுக.

(ii) A - மடிகே பத்த

B - ஹெந்த பத்த

C - படஹெல பத்த

D - குருவே பத்த

ஆகிய வரிகள் விதிக்கப்பட்ட பிரிவுகளை A, B, C, D என்ற ஒழுங்கு முறையில் எழுதுக.

(iii) கண்டி இராச்சியத்தில் நீதி நிலைநாட்டப்பட்ட முறையை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(iv) கி. பி. 1803 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் மீதான ஆங்கிலேயரின் படையெடுப்பு தோல்வி அடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2019

18 (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால தகவல்கள் கிடைக்கப் பெற்ற கரையோர வெட்டவெளி பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெண்களின் உடலமைப்பின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) a. அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட போது கையாளப்பட்ட "அலகபய மகாராஜா" எனும் சொல்லின் பொருள் யாது?

b. புராதான இலங்கையில் அரசுரிமை கையளிக்கப்பட்ட முறைகள் இரண்டினை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(iv) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனுக்கும், முன்வரலாற்று கால மனிதனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை பின்வரும் காரணிகளுடாக விளக்குக.

- குடியிருப்பு
- உணவுக்கோலம்

19 (i) புராதான காலத்தில் இந்நாட்டில் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக நிறுவனங்கள் மூன்றினை குறிப்பிடுக

(ii) புராதன இலங்கையில் கட்டிட நிர்மாணம் மற்றும் பு'ங்கா அலங்காரம் தொடர்பில் மிக உயரிய தொழினுட்பம் ஒன்று காணப்பட்டமைக்கு இரு உதாரணங்கள் தருக.

(iii) A. கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கியுள்ள கல்வெட்டுக்களை குறிப்பிடுக

1. உள்நாட்டு வர்த்தகம் முறையாக இடம் பெற்றமை.
2. குளங்களில் இருந்த நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தலாகாது.

B. வரலாற்று மூலாதாரங்களில் ஒன்றான கல்வெட்டுக்களின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

(iv) மிக புராதான காலம் தொட்டு இலங்கையில் பல்வேறு இனங்களுக்கிடையே சிறந்த இணக்கப்பாடு காணப்பட்டமையை உறுதிப்படுத்தும் மூன்று காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.

20 (i) புராதான காலத்தில் பௌத்த ஆராமைகளில் வசித்த பிக்குகளின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட பொய்கைகள் மூன்றினை குறிப்பிடுக.

(ii) கீழே A,B,C,D என தரப்பட்டுள்ள புராதன தொழினுட்பம் தொடர்பான நிர்மாணங்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. ஓடும் நீரினை தடுத்து கனிசமான அளவு அமுக்கத்தை ஏற்படுத்தவதன் மூலம் நீரை மேலெழச் செய்தல்.

B. இடி மின்னல் தாக்கங்களில் இருந்து கட்டிடங்களை பாதுகாப்பதற்கான புராதன கால தொழிநுட்ப நிர்மாணம்.

C. சத்திர சிகிச்சைக்கான உபகரண பயன்பாடு

D. சுவரை நிலத்திற்கு செங்கோணமாக அமைத்து சுவர்களின் சமநிலையினை பேணுதல்

(iii) குளக்கட்டினை நிர்மாணிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்ட இரு காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(iv) புராதான இலங்கையில் மட்பாண்டம் தயாரித்தல் மற்றும் ஆபரண உற்பத்தி தொடர்பில் உயரிய தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உதாரணங்கள் மூலம் விளக்குக.

## தரம் 11

### *மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)*

01 (i) கண்டி இராசதானி மன்னர்களைச் சந்திப்பதற்கு வருகை தந்த ஆங்கிலத் தூதுவர்கள் மூவரைக் குறிப்பிடுக.

(ii) 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கண்டி இராசதானி மீதான ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

(iii) 1818 ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.

(iv) 1848 ஆம் ஆண்டு ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்குக் கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள் எவ்வாறு காரணமாகியது என்பதனை மூன்று உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

02 (i) கீழே A, B, C யில் தரப்பட்டுள்ள அமைப்புக்கள் நிறுவப்பட்ட யாப்பு சீர்த்திருத்தங்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

A - சட்டவாக்கக் கழகம்

B - அரச கழகம் C - இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

(ii) டொனமூர் அரசியல் சீர்த்திருத்தத்திற்கு இணங்க பிரித்தானிய அரச உத்தியோகத்தர்களின் கீழிருந்த துறைகள் இரண்டினையும், இலங்கை அமைச்சர்களின் கீழிருந்த துறைகள் இரண்டினையும் எழுதுக.

(iii) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக இந்நாட்டு சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.

(iv) 1931 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் நெற்பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

## உதவிக்கருத்தரங்கு 2016

03 **(i)** பின்வரும் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களை முறையே எழுதுக.

**A** - தேயிலை **B** - தென்னை **C** - இறப்பர்

**(ii)** கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(iii)** கோப்பிப் பயிர்ச்செய்கையின் விருத்தியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை விளக்குக.

**(iv)** பிரித்தானிய ஆட்சியால் ஏற்பட்ட அனுகூலம் ஒன்றினையும், பிரதிகூலம் ஒன்றினையும் விபரிக்குக

04 **(i)** 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட நீதிமன்றங்கள் மூன்றினை எழுதுக.

**(ii)** 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(iii)** சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் சமூக முன்னேற்றத்தின் பொருட்டுக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

**(iv)** சுதந்திரத்தின் பின்னர் விவசாய அபிவிருத்தியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைத் தெளிவுபடுத்துக.

## உதவிக்கருத்தரங்கு 2017

05 (01) இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக.

(02) பிரித்தானியர் இலங்கையை கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக.

(03) பிரித்தானியர் கி.பி 1803 இல் கண்டி மீது மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியுற்றமைக்கான காரணம் இரண்டு தந்து விளக்குக.

(04) 1818 ம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்திற்கான காரணங்கள் மூன்று தந்து விளக்குக

06 (01) பிரித்தானியரால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட யாப்புகள் மூன்றைப் பெயரிடுக.

(02) கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- சட்டவாக்க சபை அமைப்புடன் தொடர்புடைய அரசியல் சீர்திருத்தம்.

B- படித்த இலங்கையர் சட்டவாக்க கழகத்திற்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்படுவதுடன் தொடர்புடைய சீர்திருத்தம்.

C- அரசுகழகம் அமைப்புடன் தொடர்புடைய சீர்திருத்தம்

D- செனற்சபை அமைப்புடன் தொடர்புடைய சீர்திருத்தம். (04 புள்ளிகள்)

(03) டொனமூர் சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்கள் இரண்டைக் குறிப்பிட்டு தெளிவுற விளக்குக.

(04) கோல்புறூக் ஆணைக்குழு முன்வைத்த பொருளாதார சீர்திருத்தங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2018

07 (i) இலங்கை மீது ஆதிக்கத்தினைச் செலுத்திய ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக.

(ii) பின்வரும் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்த

A - பிரித்தானியத் தூதுவர்களையும்

B - அவர்கள் வரும்போது கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களையும் தருக.

1762 -

1795

(iii) 1796 - 1798 வரை

A - இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தவர்கள்

B - அவர்களின் ஆட்சிமுறை பற்றி இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(iv) 1797 இல் இலங்கையின்

A - கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்களையும்

B - மியூரன் குழுவின் பரிந்துரைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2019

08 (i) ஆங்கிலேயரின் கவனம் இலங்கை மீது திரும்பியமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்றினை குறிப்பிடுக.

(ii) பிரித்தானியருடனான தூது தொடர்புகளின் போது பின்வரும் நபர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். அவர்களது பயணத்தின் நோக்கங்கள்,விளைவுகளை முறையே குறிப்பிடுக.

1782- ஹியு‘ பொயிட்

1795- றொபட் அன்ருஸ்

(iii) 1818 முதலாம் சுதந்திர போராட்டத்தின் விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(iv) 1848 இல் இடம் பெற்ற இரண்டாம் சுதந்திர போராட்டத்திற்கு ஹோல்புறுக் கமானின் சீர்த்திருத்தங்கள் ஏதுவாக அமைந்த விதத்தினை மூன்று காரணிகள் ஊடாக விளக்குக.

09 (i) கீழே தரப்பட்டுள்ள வெளியீடுகளை அச்சிட்ட அமைப்புக்களை குறிப்பிடுக.

A.1832 மாசிக்க தேக்க

B.1840 லங்கா நிதானய

C.1842 உரகல (3 புள்ளிகள்)

(ii) இலங்கையில் 1912 இல் செயற்பட்ட மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் இரண்டினை குறிப்பிடுக

(iii) டொனமூர் அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்தின் விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(iv) A. 1935 இல் இலங்கை சமசமாஜ கட்சியினை தோற்றுவித்த தலைவர்கள் இருவரை குறிப்பிடுக.

B. இலங்கையின் சுதந்திர போராட்ட செயற்பாடுகளின் போது “சூரியமல் இயக்கம்’ செயற்பட்ட விதத்தினை சுருக்கமாக விளக்குக.

10 (i) இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பின் அடிப்படை பண்புகள் மூன்றினை குறிப்பிடுக.

(ii) இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்புக்கு அமைய பாராளுமன்றத்திற்கு உரிய அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையின் 1972 இரண்டாம் குடியரசு யாப்பிற்கு அமைய தேர்தல் முறைகள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(iv) சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் காரணிகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.யு

- விவசாய அபிவிருத்தி
- கல்வி
- சமூக நலன்புரி

## பகுதி III(உலக வரலாறு)

### தரம் 10

### உதவிக்கருத்தரங்கு 2019

01 (i) வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியினால் இத்தாலியில் தோற்றம் பெற்ற வர்த்தக நகரங்கள் மூன்றினை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பாளர்களை A,B,C,D எனும் ஒழுங்கில் எழுதுக.

A. புவியீர்ப்பு சக்தி B. தொலை நோக்கி

C. கோள்கள் சூரியனை நீள்வட்ட பாதையில் சுற்றுதல்

D. குருதி சுற்றோட்டம் தொடர்பான தகவல்களை கண்டறிதல்

(iii) கைத்தொழிற் புரட்சியினால் சமூகத்தில் ஏற்பட்ட சாதகமான விளைவொன்றினையும் பாதகமான விளைவொன்றினையும் குறிப்பிட்டு விளக்குக.

(iv) கைத்தொழிற் புரட்சியானது இலங்கை மீது செல்வாக்கு செலுத்திய விதத்தினை மூன்று காரணிகளுடாக விளக்குக.

### தரம் 11

### *மாதிரி வினாத்தாள் (பரீட்சைத் திணைக்களம் - 2016)*

01 (i) பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்த மூன்று பிரதான கைத்தொழில்களைக் குறிப்பிடுக.

(ii) பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் பரவுவதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக.

(iii) கைத்தொழில் புரட்சியின் விளைவாகப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக (a) அரசியல் (b) பொருளாதாரம் ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

02 (i) கீழே A, B, C என்பதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

A - சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஜேர்மனியை உருவாக்கியவர்.

B - முதலாம் உலக யுத்தத்தில் தோல்வியுற்ற ஜேர்மனியைத் தண்டித்த உடன்படிக்கை.

C - முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் தோற்றம் பெற்ற புதிய அரசியல் முறை.

(ii) கீழே A, B, C, D என்பதில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

A - 1870 ஆம் ஆண்டில் ஜேர்மனியால் பலவந்தமாக கைப்பற்றப்பட்ட பிரான்சுக்கு உரிய நிலக்கரி, இரும்புவளப் பிரதேசம்

B - முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் சமாதானத்தைப் பேணும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு

C - அமெரிக்க ஐக்கியநாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இணைவதற்கான உடனடிக் காரணம்

D - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் யப்பான் சரணடையத் தீர்மானித்தமைக்கான காரணம்

(iii) "உலகில் பாரிய அழிவை ஏற்படுத்திய பயங்கர யுத்தம் இரண்டாம் உலக மகா யுத்தமாகும்." இக்கூற்றினை இரண்டு காரணங்களை முன்வைத்துத் தெளிவுபடுத்துக.

(iv) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக அரசியல் மாற்றமடைந்த விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

**உதவிக்கருத்தரங்கு 2016**

03 17 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பமாகிப் பரவியது.

**(i)** பிரித்தானியா தவிர்ந்த கைத்தொழில் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

**(ii)** கைத்தொழில் புரட்சி ஏனைய நாடுகளுக்குப் பரவுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(iii)** கைத்தொழில் புரட்சி, சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை இரண்டு விடயங்களை முன்வைத்து விபரிக்குக.

**(iv)** "கைத்தொழில் புரட்சி முற்றுப் பெறாத செயற்பாடு" தொடர்புசாதனங்கள், போக்குவரத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தெளிவுபடுத்துக.

04 **(i)** முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் சமாதான உடன்படிக்கை செய்வதற்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகளில் மூன்று தலைவர்களின் நாடுகளைக் குறிப்பிடுக.

**(ii)** சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(iii)** சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான இரண்டு காரணங்களை விபரிக்குக.

**(iv)** இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுத்த இரண்டு நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக.

## உதவிக்கருத்தரங்கு 2017

05 (01) கைத்தொழில் புரட்சி முதலில் ஆரம்பமான மூன்று துறைகளையும் பெயரிடுக.

(02) பின்வரும் கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடையோரை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் தருக.

A- பறக்கும் நூனாழி B- ஜெனி இயந்திரம்

C- மோட்டார் வாகனம். D- ஆகாய விமானம்

( ஜோன்கே, ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ், டெம்லர் ரைட் சகோதரர்கள், ஹென்றிபேஸ்மர் )

(03) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாகியமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக.

04) கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட சமூக அரசியல், பொருளாதார விளைவுகள் ஒவ்வொன்று தந்து விளக்குக.

6 (01) முதலாம் உலக மகாயுத்தத்தில் மத்திய ஐரோப்பிய அணியில் காணப்பட்ட மூன்று நாடுகளைப் பெயரிடுக.

(02) கீழ்வரும் A,B,C,D ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் விபரங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A- சர்ஜிவோவில் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசன்.

B- 1ம் உலக மகாயுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியாக செயற்பட்டவர்.

C- இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு காரணமான ஜேர்மனின் சர்வாதிகாரி

D- இரண்டாம் உலகமகாயுத்தத்தின் இறுதியில் சரணடைந்த ஜப்பானிய பேரரசன்

(ரூஸ்வெல்ட், வூட்டோ வின்ஸன், பேர்டினை, அடோலப் ஹிட்லர், ஹிரோகித்தோ)

(03) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிறுவனங்கள் ஆறில் இரண்டைத் தந்து அவற்றின் பணிகளை விளக்குக.

(04) 1ம் உலக மகாயுத்தத்திற்கான காரணங்கள் மூன்று தந்து தெளிவுற விளக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2018

07 (i) பிரெஞ்சுப் புரட்சியின் மூன்று எண்ணக்கருக்களையும் தருக. (3 புள்ளி)

(ii) மேல்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்ட ஒவ்வொரு கூற்றிற்குமுரிய விடைகளை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக. (4 புள்ளி)
(கிறிஸ்ரோபர்கொலம்பஸ், பேடினற்மகலன், ஏழாண்டுப்போர், ஜோன்கிரவில், ஜோர்ஜ் வோசிங்டன், மேரி அன்ரொயிட், ஐந்தாண்டுப் போர், லியோன் ட்றொஸ்கி)

A - கரீபியன் கடலில் பகாமாஸ் தீவில் இறங்கிய நாடுகாண்பயணி

B - அமெரிக்காவின் குடியேற்ற வீரர்களின் படையணிக்குத் தலைமை தாங்கியவர்

C - 16 ஆம் லூயி மன்னனின் மனைவி

D - பிரித்தானியாவிற்கும், பிரான்சிற்கும் இடையில் இடம்பெற்ற யுத்தம்

(iii) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான பொருளாதாரக் காரணிகளை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(iv) அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கான பின்னணியை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக.

08 (i) 1870 களில் உருவாகிய மத்திய ஐரோப்பிய அணியில் அங்கம் வகித்த மூன்று நாடுகளைத் தருக.

(ii) அடோல்ப் ஹிட்லரின்

A - தாய் நாடு B - எழுதிய நூல் C - கட்சி D - இராணுவம்

ஆகியவற்றின் பெயர்களை ஒழுங்கு முறையில் தருக. (4 புள்ளி)

(iii) 1 ஆம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான பின்னணியை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(iv) 1 ஆம் உலக யுத்தத்தின் பின் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின்

A - நோக்கங்கள் B - சமாதானத்திற்கு மேற்கொண்ட முயற்சிகளை விபரிக்குக.

## உதவிக்கருத்தரங்கு 2019

09 (i) ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) A. ‘‘நானே அரசு’’ என கூறிய மன்னன் யார்?

B. பிரான்ஸிய புரட்சிக்கு ஏதுவாக அமைந்த பொருளாதார காரணிகள் மூன்றினை குறிப்பிடுக

(iii) முதலாம் உலக போரின் குற்றவாளியான ஜேர்மனிக்கு ‘‘வர்செல்ஸ்’’ உடன்படிக்கையின் மூலம் விதிக்கப்பட்ட தண்டனைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(iv) இரண்டாம் உலக போரின் விளைவுகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக.


N


N


N


N





